111—

கோட்ட செயற்பொறியாளர் அலுவலகம்

***1206—திரு. சி. சந்திரசேகரன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேந்தமங்கலம் தொகுதி, சேந்தமங்கலத்திலுள்ள பேரூராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் கோட்ட செயற்பொறியாளர் அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

(முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சேந்தமங்கலம் பகுதியிலே ஒரு கோட்ட செயற்பொறியாளர் அலுவலகம் வேண்டும் என்று கேட்டிருக்கின்றார். நாமக்கல்லிலிருந்து 10 கிலோ மீட்டர் தூரத்தில்தான் சேந்தமங்கலம் இருக்கின்றது. இங்கு உப கோட்டமானது சரியாக செயல்பட்டு, மின்தடையில்லாமல் பராமரித்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, புதிய கோட்ட செயற்பொறியாளர் அலுவலகத்தை அங்கே அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சந்திரசேகரன் அவர்கள்.*

திரு. சி. சந்திரசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களுக்காகவே 24 மணி நேரத்தில் 20 மணி நேரம் அல்லும் பகலும் அயராது பாடுபட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) '(மக்களால் நான், மக்களுக்காகவே நான்)' என்கின்ற தாரக*

மந்திரத்தோடு, தமிழக மக்களுக்காக தன்னையே அர்ப்பணித்து தவ வாழ்க்கை வாழ்ந்து வரும் கழக நிரந்தர பொதுச் செயலாளர், கழகத்தின் காவல் தெய்வம், இதய தெய்வம், எங்கள் குடும்ப தெய்வம், நான் வணங்கும் தெய்வம், தமிழக நிரந்தர முதலமைச்சர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான சேந்தமங்கலம் தொகுதிக்குட்பட்ட கொல்லிமலைப் பகுதியில் இரண்டு மின்சார வாரிய உதவிப் பொறியாளர் அலுவலகமும், காளப்பநாயக்கன்பட்டி பேரூராட்சியில் இரண்டு மின்சார வாரிய உதவிப் பொறியாளர் அலுவலகமும், ஒரு உதவி செயற்பொறியாளர் அலுவலகமும், சேந்தமங்கலம் பேரூராட்சியில் இரண்டு உதவிப் பொறியாளர் அலுவலகமும், ஒரு உதவி செயற் பொறியாளர் அலுவலகமும் இயங்கி வருகின்றன. மேலும், கொல்லிமலைப் பகுதியிலிருந்து, மலைப் பகுதி மக்கள் நாமக்கல் கோட்டப் பொறியாளர் அலுவலகத்திற்குச் செல்ல வேண்டுமென்றால் 75 கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்ய வேண்டியுள்ளது. மேலும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இரண்டு வட்டங்களை உருவாக்கித் தந்துள்ளார்கள். மலைப் பகுதி மக்களின் நலனைக் கருத்தில்கொண்டும், விவசாயப் பெருங்குடி மக்களின் நலனைக் கருத்தில் கொண்டும், மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, சேந்தமங்கலம் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான மின்சார வாரிய கோட்ட செயற்பொறியாளர் அலுவலகத்தை அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கோட்ட செயற்பொறியாளர் அலுவலகம் அமைக்க வேண்டுமென்றால், குறைந்தபட்சம் ஐந்து உப கோட்டம் இருக்க வேண்டும். நாமக்கல்லில் ஏற்கெனவே ஆறு இருக்கின்றன. அதைப்

2016 ஆகஸ்ட் 29]

பிரிக்கின்றபோது அங்கேயும் குறைவாகிவிடும், சேந்தமங்கலத்திற்கும் தேவையான அளவு இல்லாமல் போய்விடும். வருங்காலத்திலே தேவையிருப்பின், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சந்திரசேகரன் அவர்கள்.*

திரு. சி. சந்திரசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருங்காலத்தில் பரிசீலிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம் அவர்கள்.*

திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அச்சம் என்பது மடமையடா, அஞ்சாமை திராவிடர் உடமையடா' என்ற புரட்சித் தலைவர் அவர்களின் பாடல் வரிகளுக்கு ஏற்ப, எதற்கும், யாருக்கும் அஞ்சாத சிங்கம் எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) தனித்து நின்று, சிங்க நடை போட்டு, சிகரத்தில் ஏறி, சரித்திர சாதனை படைத்துவரும் தங்க நிகர் தலைவியை வணங்குகிறேன்.*

அரியலூர் மாவட்டத்திலே 6 ஒன்றியங்கள், 2 நகராட்சிகள், 2 பேரூராட்சிகள் உள்ள இடத்தில் ஒரேயொரு Divisional Engineer *அலுவலகம் மட்டுமே இருக்கின்றது. அங்கு அதிக அளவில் மோட்டார்களும், பல இலட்சம் வீட்டு மின் இணைப்புகளும் இருக்கின்றன. ஒரு* Divisional Engineer *அலுவலகம் இருக்கின்ற ஜெயங்கொண்டத்தில் புதியதாக மேலும் ஒரு* Divisional Engineer *அலுவலகம் அமைத்துத் தர மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை வேண்டி அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஏற்கெனவே அங்கு ஒரு கோட்ட செயற்பொறியாளர் அலுவலகம் இருக்கிறது என்று சொல்லியிருக்கின்றார். ஆக, ஒரு கோட்ட செயற்பொறியாளர் அலுவலகம் அமைக்க வேண்டுமென்று சொன்னால், 5 உப கோட்டங்கள் இருந்தால்தான் அமைக்க முடியும். ஆக, அந்தப் பகுதிகளுக்கு ஒரு கோட்ட செயற்பொறியாளர் அலுவலகமே போதுமானதாக இருக்கும் என்று நினைக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்றபடி செய்ய வேண்டுமென்றால், உப கோட்டங்களை முதலில் பிரிக்க வேண்டும். அதற்குப் பின்னால்தான் கோட்ட செயற் பொறியாளர் அலுவலகத்தைப் பிரிக்க வேண்டும். வருங்காலத்தில் எந்த அளவுக்குத் தேவை இருக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 112, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

112—

கிராம ஊராட்சியைத் தரம் உயர்த்துதல்

***223—திரு. வி. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கம் கிராம ஊராட்சியைப் பேரூராட்சியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?